2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

5—

அங்கன்வாடி மையக் கட்டடம்

38299*—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சி, 18-வது வார்டு, பெரியகாவனம் பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சி, 18-வது வார்டு, பெரியகாவனம் பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சர்வே எண் 23/116-ல் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, புதிய கட்டடம் விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறி அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*